<u>சாட்சியின் வாக்குமூலம்</u>

<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

**அசல் வழக்கு எண் : 241/2025**

**DW1– திரு. பாண்டியன் த/பெ. ஆதிமூலம்**

**22.04.2026**

<u>சாட்சி சத்திரப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>குறுக்கு விசாரணை :</u>**

**நேரம் 12.30 மணி**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அப்பா இறந்துவிட்டால் அவர் விட்டுபோன சொத்துக்கள் அவருடைய வாரிசுகளுக்கு சொந்தம் என்றால் சரிதான். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1979 ஆம் வருடம் பிறந்தேன். என்னுடைய தகப்பனார் என்னை மைனராக காண்பித்து 1986 ல் சொத்து வாங்கினார் என்றால் சரிதான். அவ்வாறு அந்த சொத்து வாங்கும்போது அந்த சொத்திற்கான பணத்தை என் தந்தை கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும், எதிர்உரையிலும் மைனராக இருக்கும்போது என் தந்தை சொத்து வாங்கியது உண்மை நான் மேஜரானவுடன் மேற்படி சொத்து எனக்கு சொந்தம் என கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை. என் பிரகாரம் நான் மைனராக இருக்கும்போது சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டேன் என்றால் சரிதான். என் தந்தை இறந்தபிறகு 2016 ல் நானும், வாதிகள் என் தாயார், என் சகோதரி சேர்ந்து என் தந்தையின் சொத்தை விற்பனை செய்தோம் என்றால் சரிதான். அவ்வாறு சொத்தை விற்பனை செய்யும்போது 3 பேருக்கும் கிரைய தொகையை பங்கிட்டுக்கொண்டோம் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பதாக என் சகோதரி வழக்கறிஞர் மூலமாக எனக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். 23–10–2015 ல் வழக்கறிஞர் மூலமாக பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதில் என்னுடைய சகோதரி எனக்கு அக்கு விடுதலை பத்திரம் எழுதி தரவேண்டும் என்று கூறுப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாக்கம் வெங்கடேஷ்வரா நகரில் மனை எண் 36 ஐ பெரம்பூரைச் சேர்ந்த C.G. ஆறுமுகம் என்பவரிடமிருந்து என் தந்தை கிரையம் செய்தார் என்றால் சரிதான். மனை எண் 36 ஐ கிரையம் வாங்கும்போது மனை எண் 3 ஐ வாங்க ஒப்பந்தம் போட்டார்

என்றால் இல்லை. மனை எண் 3 ஐ என் மனைவி வாங்கி என் மகன் படிப்பு செலவிற்காக தற்போது விற்றுவிட்டோம். என்னுடைய எதிர்உரையில் மனை எண் 3 ஐ நான் பணம் கொடுத்து வாங்கினேன் என்று கூறியிருப்பது தவறு என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் டராக்டர் ஓட்டுகிறேன். டிராக்டர் என் தந்தை வாங்கியது என்றால் சரியல்ல. என் தந்தை டிராக்டர் வாங்கி விற்றுவிட்டார். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது டிராக்டரை விற்றுவிட்டார் என்று பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. தற்போது யாரிடம் டிராக்டர் ஓட்டுகிறேன் என்றால் கூலிக்காக முருகன் என்பவரிடம் டிராக்டர் ஓட்டுகிறேன். டிராக்டர் ஓட்டும் தொழிலை எவ்வளவு நாளாக செய்து வருகிறேன் என்றால் 1996 ஆம் வருடத்திலிருந்து டிராக்டர் ஓட்டி வருகிறேன். என் தந்தைக்கு விவசாய நிலம் சித்தேரிகரையில் உள்ளது என்றால் இல்லை. சித்தேரிகரையில் சொத்திருப்பதாக ஆவணங்களை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியும். எனக்கு குடும்ப சொத்தை தவிர வேறு எந்த வருமானமும் இல்லை என்றால் கூலி வேலை செய்து வருகிறேன். என் தகப்பானர் இறப்பதற்கு முன்பதாக என் சகோதரி சுமதிக்கும் எனக்கும் தகராறு இருந்தது என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரி வேறு இனத்தை சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து கொண்டதால் அவருக்கு சொத்தில் பங்கு இல்லை என்று என்னுடைய எதிர்உரையில் கூறியுள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய சகோதரி, என் தாயார், எனக்கும் என் தகப்பானர் விட்டு சென்ற சொத்தில் பங்கு உண்டு என்றால் சரியல்ல. எந்த விதத்திலும் எனக்கு தனிப்படட வருமானம் இல்லாமல் நான் சம்பாதித்த சொத்து என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவாவில் கோரியுள்ள படி வாதிக்கு சொத்தில் பங்கு பெற உரிமையுள்ளது என்றால் சரியல்ல.

**நேரம் 12.50 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.